

மூத்த தமிழறிஞர் – திராவிட இயக்கச் சிந்தனையாளர் (நினைவில் வாழும்) முனைவர் மா. நன்னன் அவர்களின் துணைவியார் திருமதி பார்வதி அம்மையார் அவர்கள் நேற்று இயற்கை எய்தினார். தகவல் அறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சைதை – சின்னமலை பகுதியில் உள்ள நன்னன் அவர்களின் இல்லம் சென்று, பார்வதி அம்மையார் அவர்களின் திருவுடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். முன்னாள் அமைச்சர்கள் எ.வ. வேலு, மா. சுப்பிரமணியன், துணை மேயர் மு. மகேஷ் குமார் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.

### தமிழ்நாடு முழுக்க பெண்களுக்குப் பாதிப்பு!

# த.வெ.க. அரசு மீது பொதுமக்கள் கடும் கோபம்!

## தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் காட்டம்!

விருத்தாசலம்,ஜூன் 6-

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் தொகுதி எம்.எல்.ஏ. அலுவலகத்தை தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்எல்ஏ நேற்று திறந்து வைத்தார்.



பின்னர் அவர் அளித்த பேட்டி வருமாறு:-

கடன் தள்ளுபடி போன்ற அறிவிப்புகள், நிதி நிலையை பார்த்து வாக்குறுதிகளை முதலமைச்சர் கொடுக்க வேண்டும். ஒரு சில வாக்குறுதிகளை கொடுத்து வெற்றிப்பெற்று விட்டால் நிச்சயம் மக்கள் கேட்பார்கள்.

தவெக அரசு அறிவித்தபடி டாஸ்மாக் கடைகளை மூடவில்லை. டாஸ்மாக் கடை மூடப்படும் என்பது கண் துடைப்பான அறிவிப்பாக உள்ளது. தமிழ்நாடு முழுக்க பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் தவெக அரசு மீது மக்கள் கோபத்தில் உள்ளனர். பாலியல் வன்கொடுமைகள், சிறு குழந்தைகள் கூட பாதிக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பொறுப்பு அமைச்சர்களை நியமித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தேர்தல் முடிந்து விட்டது, முதலமைச்சர் இதற்கு மேலும் பிரசாரம் செய்யாமல் மக்களுக்கு என்ன செய்யப் போகிறோம் என ஆக்கப்பூர்வமாக பேச வேண்டும்.

கொஞ்சம் கால அவகாசம் கொடுக்க வேண்டும். தேர்தல் முடிந்துவிட்டது, முதலமைச்சர் இதற்கு மேலும் பிரச்சாரம் செய்யாமல் மக்களுக்கு என்ன செய்யப் போகிறோம் என ஆக்கப்பூர்வமாக பேச வேண்டும். எந்த கூட்டணியில் நாம் இருக்கிறோமோ அந்த கூட்டணிக்கு நாம் உண்மையாக இருக்க வேண்டும், அதுதான் எங்கள் நிலைப்பாடு. தி.மு.க. கூட்டணியில் தொடர்ந்து இருக்கிறோம். இதுதான் தேமுதிகவின் நிலைப்பாடு.

இவ்வாறு அவர் கூறினார்.

---

### புதுச்சேரி கழக அமைப்பாளர் இரா.சிவா தலைமையில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்த நாள் விழா!

## தி.மு.க.வினர் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்!

புதுச்சேரி, ஜூன் 6-

தமிழ்நாடு முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.



வில்லியனூர் தொகுதி தி.மு.க. சார்பில், தொகுதி செயலாளர் மணிகண்டன் ஏற்பாட்டில் வில்லியனூர் அண்ணா சிலை அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திருவுருவப் படத்திற்கு தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

தொடர்ந்து மணவெளி தொகுதி தி.மு.க. சார்பில், தொகுதி செயலாளர் ராஜாராமன் ஏற்பாட்டில் தவளக்குப்பம் நான்குமுனை சந்திப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, ஏழை, எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

அரியாங்குப்பம் தொகுதியில் பொதுக்குழு உறுப்பினர்கள் சக்திவேல், கோபாலகிருஷ்ணன், தொகுதி செயலாளர் சீத்தாராமன் ஆகியோர் ஏற்பாட்டில், வீராம்பட்டினத்தில் நிறுவப்பட்டுள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா மாலை அணிவித்தும், அவரது படத்திற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தினார்.

பின்னர் திமுக அமைப்பாளர் இரா.சிவா தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏ.எப்.டி. திடலில் ஒன்றிணைந்து தி.மு.கழகத்தின் இரு வண்ணக் கொடியேந்தி ஊர்வலமாக சென்று அண்ணா சிலை அருகில் மாநில கழகம் சார்பில் அமைப்பட்டிருந்த கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து புதுச்சேரி அரசு சார்பில் மேரி ஹாலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில், திமுக அமைப்பாளரும், மேனாள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா தலைமையில் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இதேபோல், புதுச்சேரியில் உள்ள 23 தொகுதிகளிலும் அந்தந்த தொகுதி கழகங்கள் சார்பில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தப்பட்டு, ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

பாகூர் தொகுதியில் தி.மு.க. பொருளாளர் இரா. செந்தில்குமார் எம்.எல்.ஏ., தலைமையில் பல்வேறு கிராமங்களில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தப்பட்டு, 1500 நபர்களுக்கு மதிய உணவு மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

இந்த கழ்ச்சிகளில், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் வே. கார்த்திகேயன், அ. செந்தில் (எ) ரமேஷ், விக்னேஷ் கண்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பூ. மூர்த்தி, நந்தா. சரவணன், மாநில துணை அமைப்பாளர் அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், கே.எம்.பி. லோகையன், டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி. கோபால், வெ. ராமசாமி, ப. செல்வநாதன், ந. தங்கவேலு, பெ. வேலவன், ரவீந்திரன், எஸ். தர்மராஜன், பெ. பழநி, எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தட்டாஞ்சாவடி தொகுதி பொறுப்பாளர் டாக்டர் நித்திஷ், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், து. சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவக்குமார், ப. வடிவேல், பி.சா. இளஞ்செழியபாண்டியன், கலிய. கார்த்திகேயன், சே. ராதாகிருஷ்ணன், செ. சத்தியவேலு, முருகதாஸ், அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி. மணிமாறன், விவசாய அணி வெ. குலசேகரன், மீனவர் அணி ந. கோதண்டபாணி, நெசவாளர் அணி ந. செந்தில்முருகன், வழக்கறிஞர் அணி ச. பரிமளம், தொமுச அண்ணா அடைக்கலம், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டர் அணி சுமதி, தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், ஆதிதிராவிடர் நலக்குழு சி. ஆறுமுகம், வர்த்தகர் அணி சு. ரமணன், தகவல் தொழில்நுட்ப அணி தாமோ. தமிழசரன், அமைப்புசாரா ஓட்டுநர் அணி ம. மதிமாறன், மருத்துவர் அணி லூ. ஆனந்த் ஆரோக்கியராஜ், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அ. முகம்மது ஹாலிது, சுற்றுச்சூழல் அணி த. முகிலன், அயலக அணி அ. ஷாஜகான், அணிகளின் தலைவர்கள் செல்வா, கிருஷ்ணமூர்த்தி, துணைத் தலைவர்கள் வர்த்தகர் அணி இரா. குரு (எ) சண்முகசுந்தரம், இலக்கிய அணி வி.எஸ். பாண்டியன், மகளிர் அணி வெ. பிரியதர்ஷினி, மகளிர் தொண்டர் அணி ரா. விஜயலட்சுமி, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை ராஜேஷ், சுற்றுச்சூழல் அணி நவீன், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தாமரைக்கண்ணன், ரெமிஎட்வின், கிருபாசங்கர், பஜிலுதீன் மற்றும் அணிகளின் துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், மொழிப்போர்த் தியாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புகள் பங்கேற்றனர்.



தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், தியாகதுருகம் ஒன்றிய பேரூர் கழகம் சார்பில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தும், கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தும், 60 அடி உயரமுள்ள கொடிக்கம்பத்தில் கழக இரு வண்ண கொடியை ஏற்றி வைத்தும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் பல்வேறு வாழ்த்து கோஷங்கள் எழுப்பியும் மிக உற்சாகமாக எழுச்சியுடன் கொண்டாடினார்கள், இந்த நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் இரா.நெடுஞ்செழியன், கே.கே.அண்ணாதுரை, தே.மலையரசன் எம்.பி., பொதுக்குழு உறுப்பினர் பொன்.இரா.மணிமாறன், மாவட்ட பிரதிநிதி மு.சங்கர், மாவட்ட துணை செயலாளர் புவனேஸ்வரி பெருமாள், ஒன்றிய குழு தலைவர் ந.தாமோதரன், பேரூராட்சி மன்ற தலைவர் ந.வீராசாமி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# அரசியல் - கலைஞரிடம் கற்றுக்கொள்!



(ஐந்து விரல்களையும் பிரித்து காட்டுகிறார் )

“1980ஆம் ஆண்டு சட்ட மன்ற தேர்தல் முடிந்தது. திமுகவிற்கு படுதோல்வி! கட்சிக்குள் எழுச்சியை கொண்டு வர சில முயற்சிகள் செய்தார் தலைவர் கலைஞர். வலது கையின் ஐந்து விரல்களையும் விரித்து காட்டி உதயசூரியன் என்று சொல்ல ஆரம்பித்தார்.

உடன்பிறப்புகள் மத்தியில் ஒரு புத்துணர்வு.

எம்ஜிஆருக்கும் அந்த எழுச்சி புரிந்தது. எழுச்சியை அடக்க ஏதாவது செய்ய வேண்டுமே என யோசித்தார். தெரிந்த பத்திரிகையாளர் ஒருவர் மூலமாக, “முத்தமிழறிஞர் கலைஞர் ஐந்து விரல்களைக் காட்டுகிறாரே?” எனக் கேள்வி கேட்க வைத்தார். அதற்கு இன்ஸ்டன்ட் பதிலாக, “தான் ஒரு பஞ்சமா பாதகன் என்று கலைஞர் சொல்லாமல் சொல்கிறார் போல...” என எம்ஜிஆர் சொன்ன வார்த்தைகளில் தமிழகமே ஆடிப் போனது.

பத்திரிக்கையாளர்கள் தலைவர் கலைஞரின் பதிலை எதிர்பார்த்து ஓடினார்கள். கலைஞர் எங்கே இருக்கிறார் என்பதே பலருக்கும் தெரியவில்லை. இரவு 08:30 மணிக்கு பெரம்பூரில் ஒரு பொதுக்கூட்டம் நடப்பதாகவும் அதில் கலைஞர் பேசுவார் என்றும் தெரிய வந்தது. அதற்கிடையில் மாலை பத்திரிகைகளில், “கலைஞர் பஞ்சமா பாதகன்... எம்ஜிஆர் கடும் தாக்கு” என தலைப்பு செய்திகள் வரத் தொடங்கின. வானொலியிலும் எம்ஜிஆரின் வார்த்தைகளே முக்கிய செய்தியானது. அதனால், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார் என மொத்த தமிழகமும் காத்துக் கிடந்தது.

பெரம்பூர் ராகவாச்சாரி தெருவில் பொதுக் கூட்டம். ஏழு மணிக்கே ஆயிரம் பேர் திரண்டிருந்தார்கள். குட்டி பேச்சாளர்கள் யாரும் இந்த பஞ்சமா பாதகன் விமர்சனம் பற்றி மூச்சுகூட விடவில்லை. சம்பிரதாயமாகப் பேசிவிட்டு அவர்களே கலைஞரின் பதிலுக்காகக் காத்திருந்தார்கள்.

பேப்பர் மில்ஸ் சாலையில் உள்ள காந்தி சிலையை நோக்கி மேடை. முன்னும் பின்னுமாய்க் கட்டுக்கடங்காத கூட்டம். பக்க வாட்டில் இருபுறமும் உள்ள அத்தனை சந்துகளிலும் கூட்டம். வீடுகளின் வாசல்கள் மேல் மாடிகள் எல்லாவற்றிலும் கூட்டம். சுமார் இருபதாயிரம் பேர் இருந்திருப்பார்கள். வரவேற்பது, துண்டு அணிவிப்பது, மாலை போடுவது எல்லாம் கடைசியில் என்று கலைஞர் சொல்லிவிட்டார். மேடையில் மயான அமைதி. மைக் பிடித்தார் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர்.

மைக்கை மட்டுமா பிடித்தார்? எம்.ஜி.ஆ.ரையும் சேர்த்து ஒரே பிடி பிடித்தார்.

“இன்று நண்பர் எம்.ஜி.ஆர். என்னை பஞ்சமாபாதகன் என்றார்.

ஏன் நான் பஞ்சமா பாதகனாம்?

ஐந்து விரல்கள் பிரித்துக் காட்டுகிறேனாம்.

அதனால் பஞ்சமா பாதகனாம்.

இப்படி ஐந்து விரல்களையும் பிரித்து காட்டினால் சைவ சமயத்தை பின் பற்றுபவருக்கு நமசிவாய என்கிற பஞ்சாட்சரம் நினைவுக்கு வரும்.

மகாபாரதம் படித்தவருக்கு பஞ்ச பாண்டவர், பாஞ்சாலி நினைவுக்கு வரும்.

தமிழன் என்றால் சிலப்பதிகாரம், மணி மேகலை,வளையாபதி, குண்டலகேசி, சீவக சிந்தாமணி என ஐம்பெரும் காப்பியங்கள் நினைவுக்கு வரும்.

இலக்கியப் புலவர் என்றால் ஐவகை நிலங்கள் நினைவுக்கு வரும்; ஐவகை திணைகள் நினைவுக்கு வரும்.

கர்நாடக சங்கீத ரசிகர் என்றால் தியாகைய்யர் அருளிய பஞ்ச ரத்ன கீர்த்தனை நினைவுக்கு வரும். ஆனால் நண்பர் எம்.ஜி.ஆ.ருக்கு என்று சொல்லி நிறுத்தி கொஞ்சம் இடைவெளி விட்டார் கலைஞர். கூட்டம் ஆர்ப்பரித்தது. தான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை மக்களின் எண்ணத்திற்கே விட்டார் கலைஞர்.

அரசியல் பேச்சு என்பது அப்படியல்லவா இருக்க வேண்டும். இன்றைக்கும் பேசுகிறார்களே... த்தூ! நல்லா வருது வாயில..”

**பலரும் சுட்டிக்காட்டி உள்ள இந்த கருத்தை கூட அறியாமலும், படிக்காமலும் இன்றைய அரசியல் தலைவராக பலர் பேசுவதைக் காண்கிறோம்.**



**முனைவர் பொன்னேரி சிவா**
தலைமைக் கழகப் பேச்சாளர்




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் விழா கேரள மாநிலம் முழுவதும் உள்ள பதினான்கு மாவட்டங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் புனலூரில் உள்ள ஆஷா பவன் ஆதரவற்றோர் இல்லத்தில் கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர். முருகேசன் கேக் வெட்டி அங்குள்ள மக்களுக்கு இனிப்பு மற்றும் உணவு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் கொல்லம் மாவட்டக் கழகச் செயலாளர் ரெஜிராஜ், மாநில தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் விபின் முருகேசன்,ஷாம் லால், சுரேஷ் குன்னிக்கோடு, ரினுராஜன், புவனேஷ், ஹரி புனலூர்,பி.கே.பாபு, தினேசன், ராமர் சீனிவாசன், பசலுதீன், ஹனிபா, சீனா, லால்ஜி, கிரிஜா, சுலோச்சனா, சுபராணி, ஷாஜிதா, சரோஜினி, ஷிபு ஆகியோர் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கடலூர் மாநகர தி.மு.க. சார்பில் கடலூர் மாநகர செயலாளர் கே.எஸ்.ராஜா தலைமையில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இள.புகழேந்தி, கடலூர் மாநகராட்சி மேயர் சுந்தரி ராஜா ஆகியோர் முன்னிலையில் முத்தமிழறிஞர்கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இதில் மாநகர அவைத்தலைவர் பழனிவேல், துணை செயலாளர் சுந்தரமூர்த்தி, எல்சா, மாவட்ட பிரதிநிதி ராமு, கீ.கோ.செல்வமணி, சிவானந்தம் மற்றும் பகுதி கிளை கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.